# இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

## பதவி நிலையினருக்கான வெற்றிடங்கள்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை (CAASL) மூலோபாய திட்டமிடல், தொழில்முறை வழிகாட்டுதல் மற்றும் தீவிர கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் நன்கு நிறுவப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ் தேசிய சட்டத் தேவைகள் மற்றும் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) இணங்க பாதுகாப்பான திறமையான வழக்கமான மற்றும் சுற்றுச்சூழல் நட்புடன் தேசிய சிவில் விமானச் சேவை அமைப்பின் செயல்பாட்டை உறுதி செய்கின்றது. இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது பின்வரும் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் சிறந்த தகுதி மற்றும் விரிவான அனுபவத்தைக் கொண்ட ஆற்றல் மிக்க, அனுபவமுள்ள மற்றும் சுயமாக சிந்தித்து செயலாற்றக்கூடிய பணியாளர்களை தேடுகின்றது.

**பணிப்பாளர் (மனித வளம் மற்றும் ஆதன முகாமைத்துவம்)**
**பதவிக் குறியீடு HM-1-1D9 பதவிகளின் எண்ணிக்கை 01**

வழங்கப்படும் வேதனம்: (சம்பள அளவு) (HM1-1) ரூபா 80,295-15x2,2700-114,345 - 02/2016 (I) முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம்.

அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் அண்ணளவாக 173,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப்படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் அடக்கப்படும்.

எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்)

பிற நன்மைகள்: மருத்துவ காப்பீட்டுத் திட்டம், விபத்து காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசி கட்டண பற்றுச்சீட்டுக்களை மீள்செலுத்துதல்.

| தகைமை மற்றும் அனுபவம் | |
|---|---|
| **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம், நிர்வாகம் அல்லது வர்த்தகம் ஆகிய துறைகளில் பெற்ற மூன்று வருடங்களுக்கு குறையாத இளமாணிப் பட்டம்<br><br>**அத்துடன்**<br>முகாமைத்துவம், நிர்வாகம், வர்த்தகம் அல்லது தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத் தகைமை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்<br><br>**மற்றும்**<br>கூட்டுத்தாபனமொன்றில், நியதிச்சட்ட சபை/ நிறுவனம்/அரசு சார்ந்த நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட அனுபவம். | **உள்வாரி விண்ணப்பதாரிகள்**<br>(கீழேயுள்ள 01 அல்லது 02 விருப்பத் தேர்வு)<br><br>**விருப்பத் தேர்வு 01**<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்.<br><br>**விருப்பத் தேர்வு 02**<br>மனித வளம் மற்றும் ஆதன முகாமைத்துவத்தில் முகாமையாளர் வகுதி (எம்எம் 1-1) 1 ஆம் தர பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.<br>அத்துடன்<br>கடந்த ஐந்து (05) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்.<br>அத்துடன்<br>கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றிறன் மதிப்பீட்டில் 'சிறந்த' அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல். |

**வயது எல்லை:**

| பதவி | வயதெல்லை | குறிப்புக்கள் |
|---|---|---|
| பணிப்பாளர் | 35-55 வயதுக்கிடையில் | இலங்கை விமானப்படை, விமானநிலையம் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான சேவைகள் (ஸ்ரீலங்கா), உள்ளூர் விமான சேவைகள் அல்லது பறக்கும் பயிற்சி பாடசாலைகள் ஆகியவற்றில் பணியாற்றிய உள்வாரி மற்றும் ஆளணியருக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.<br><br>மேலதிக தகவல்கள், பதவி விபரங்கள் மற்றும் நிலையான விண்ணப்பப்படிவத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் **www.caa.lk** என்ற உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.<br><br>விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்த பதவிக்கான தகுதியை நிரூபிக்கும் தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கான ஆவண ஆதாரங்களின் பிரதிகளுடன் விண்ணப்பத்தை அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றனர்.<br><br>நிலையான விண்ணப்ப படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் சேவை செய்யும் விண்ணப்பதாரர்கள் அந்தந்த நிறுவனத்தின் தலைவர் மூலமாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.<br><br>உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு 2024.06.02 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் **employment@caa.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுபுதல் வேண்டுமென்பதுடன் அவைகள் அங்கீகரிக்கப்படும்.<br><br>விண்ணப்பங்களை சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை, இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க என்ற முகவரிக்கு அனுப்புதம் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.<br><br>தகுதித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகத் தேர்வு / பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.<br><br>**சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம்/ பிரதான நிறைவேற்று அதிகாரி,**<br>**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை,**<br>**இல. 152/2, மினுவாங்கொட வீதி,**<br>**கட்டுநாயக்க.**<br>**19.05.2024** |